நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வள்ளியூர்
முன்னிலை.– திரு. **பி. மோசஸ் ஜெபசிங், பி.எஸ்சி, எம்.எல்.**,
நீதித்துறை நடுவர் , வள்ளியூர்
2026–ம் ஆண்டு ஜுன் திங்கள் 29 –ம் நாள் திங்கட்கிழமை

**பட்டியல் வழக்கு எண். 98/2015**

**CNR.No: TNTL09-000133-2015**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | Name of the Court | Judicial Magistrate,Valliyoor . | | |
| 2 | Name of the Judge | Thiru P. Moses Jebasingh B.Sc., M.L., | | |
| 3 | Date of Judgment | 29.06.2026 | | |
| 4 | Case Number along with CNR No. | CC.No.98/2015 in Cr.No. 161/2013<br>CNR.No: TNTL09-000133-2015 | | |
| 5 | Name of the parties of the case | Inspector of Police, Thirukkurungudi<br>Complainant. | | |
| | | Ani ( Aged 54/2013), S/o. Kuttan, Vettancheri house, Perungnalagramam, Kayankulam, Alapuzha District, Kerala.<br>Accused. | | |
| 6 | Date of occurence | 05.10.2013 | | |
| 7 | Date of complaint | 16.11.2013 | | |
| 8 | Date of arrest if any and remand | -------- | | |
| 9 | Period of remand of the accused | ------- | | |
| 10 | Date of release on bail | 26.03.2014 ( Anticipatory Bail) | | |
| 11 | Date of Final Report | 25.05.2015 | | |
| 12 | Date of committal of case to the court of sessions. | Does not arise. | | |
| 13 | Date of questioning of the accused u/s 240 of code criminal procedure. | 23.07.2015 | | |
| 14 | Date of examination in chief and cross examination of the witnesses. | Witnesses | Chief | Cross |
| | | PW1 | 02.03.2017 | 16.10.2025 |
| | | PW2 | 02.03.2017 | 16.10.2025 |
| | | PW 3 | 02.03.2017 | 11.02.2026 |
| | | PW 4 | 18.05.2017 | 18.05.2017 |
| | | PW 5 | 18.05.2017 | 18.05.2017 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | PW 6 | 17.08.2017 | 17.08.2017 |
| | | PW 7 | 26.03.2018 | 26.03.2018 |
| | | PW 8 | 20.05.2026 | 20.05.2026 |
| 15 | Date of Filing of all miscellaneous petitions and the results including the results on challenge before the superior courts except routine petitions like under section 317 of the code. | CrlMP | Petition | Result |
| | | 13028/2015<br>13029/2015<br>13030/2015<br>1921/2018<br>1920/2018<br>2990/2018<br>3042/2018<br>3043/2018<br>3044/2018 | Surrender<br>Advance<br>Recall<br>Advance<br>Recall<br>Recall<br>Advance<br>Recall<br>Surrender | Allowed<br>Allowed<br>Allowed<br>Allowed<br>Allowed<br>Allowed<br>Allowed<br>Allowed<br>Allowed |
| 16 | Date of examination of the accused under section 313 of the code | 03.06.2026 | | |
| 17 | Date of abscondance of an accused and his appearance/production as the case may be | 01.10.2015-17.12.2015<br>12.04.2018-14.06.2018 | | |
| 18 | Date of stay by superior courts and the results thereof | Does not arise. | | |
| 19 | Date of commencement of trial | 23.07.2015 | | |
| 20 | Date of closure of trial | 03.06.2026 | | |
| 21 | Date of sentence of Order | ----- | | |
| 22 | Date of service of copy of Judgment to the accused | ----- | | |
| 23 | If any delay, give explanation | This case was pending for trial from 23.07.2015. But witness summon promptly not served by the prosecution. Moreover during abscondance of accused prosecution promply not executed the Non Bailable Warrant against accused. Hence, delay occured in this case. | | |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் 27.05.2015 –ம் தேதி கோப்பில் எடுக்கப்பட்டு என் முன்பு 17.06.2026 அன்று இறுதி விசாரணைக்கு

வந்து, அரசுத் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்கள், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.V.ராம்நாத் அவர்கள் மேற்கண்ட வழக்கறிஞர்களின் வாதங்களைக் கேட்டும், இது நாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்த ஆவணங்களை ஆராய்ந்தும், இறுதி பரிசீலனைக்குப்பின், இன்று இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்படும்...........

## தீர்ப்புரை

1) அரசு தரப்பில், எதிரியும், சாட்சி 1ம் தொழில் சம்பந்தமாக நன்கு தெரிந்தவர்கள். சாட்சி 1ன் விவசாய நிலத்தில் விளைந்த சுமார் 15,000/– ஏத்தன் ரசகதளி மட்டிரக வாழைத்தார்களை விலைபேசி எதிரி மேற்படி வாழைத்தார்களை வெட்டும்போது ரூ. 35,00,000/– த்தை சிறுக சிறுக பணம் தருவதாக கூறியுள்ளார். கூறியபடி எதிரி பணத்தை கொடுக்காமல் வாழைத்தார்களை வெட்டிவிட்டு ஏமாற்றியுள்ளார். இந்நிலையில் கடந்த 05.10.2013 ம் தேதி மேற்படி பணத்தில் ரூ. 13,00,000/– த்தை தருவதாக எதிரி கூறியதையும் தராததால் வாதி போன் மூலம் எதிரியிடம் கேட்டதற்கு சாட்சி1ஐ, எதிரி பிண்டச்சி மவனே பணம் தரமுடியாது இனி பணம் கேட்டால் உன்னை ஆள் வைத்து கொன்றுவிடுவேன் என்று மிரட்டி வாதியிடம் வாழைத்தார்களுக்குரிய பணத்தை தராது எதிரி, வாதியை ஏமாற்றி மோசடி செய்ததோடு பணம் கேட்ட வாதியை தகாத வார்த்தையால் பேசி மிரட்டிய குற்றத்திற்காக எதிரி மீது இதச பிரிவுகள் 420, 294(b), 506(1) படி திருக்குறுங்குடி காவல் ஆய்வாளரால் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் குவிமுச பிரிவு 190(1) (b) ன் படி கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு குவிமுச பிரிவு 204 ன் படி எதிரிக்கு அழைப்பாணை சார்பு செய்ய உத்தரவிடப்பட்டது. இவ்வழக்கின் எதிரி அழைப்பாணையின்பேரில் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானதும் வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச.பிரிவு 207–ன் கீழ் இலவசமாய் வழங்கப்பட்டு போதிய அவகாசம் வழங்கிய பின்பு குற்றம் பற்றி வினவ எதிரி குற்றத்தினை மறுத்தார். ஆவணங்கள் பரிசீலனை செய்து எதிரி மீது இதச பிரிவுகள் 420, 294(b), 506(1) படியும், குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி வினவ எதிரிகள் விசாரிக்கவேண்டுமென்றார். எனவே அரசுத்தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3) அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா. 8 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.18 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

**<u>4) அரசுத்தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்களிலிருந்து தெரியவரும் அரசுத்தரப்பு சாட்சிகளின் சுருக்கம் பின்வருமாறு.,–</u>**

4.1)அ.சா.1 திரு. காமராஜ் தனது சாட்சியத்தில், தான் 2012 ம் வருடம் ராஜபுதுாரிலுள்ள தனக்கு சொந்தமான 60 ஏக்கர் நிலத்தில் ரசகதளி, ஏத்தன், மட்டி போன்ற 15000 வாழைப்பயிர் செய்திருந்ததாகவும், தனக்கு பாலக்காடு ஊராட்சி சேக் அப்துல் காதர் மகன் சுனில் என்பவர் மூலம் எதிரி அனியை தனக்கு தெரியும் என்றும், 2013 ம் வருடம் பிப்ரவரி மாதம் காயங்குளத்தை சேர்ந்த குட்டன் மகன் அனி என்பவர் தன்னிடம் வந்து தன்னுடைய தோட்டத்திலிருந்த வாழை தாரை பார்வையிட்டு தன்னிடம் ரசகதளி வாழை தார் தலா ரூ. 260/–, மட்டி ரூ. 200/– என ரூ. 35,00,000/– விலை பேசியதாகவும், பிப்ரவரி மாதம் 24 ம் தேதி வாழை குலையை வெட்ட ஆரம்பித்ததாகவும், அதன்பின் மாவடியில் வைத்து கொஞ்சம் கொஞ்சம் பணம் தந்து, லாரியில் ஏற்றி கொஞ்சம் கொஞ்சமாக கொண்டு சென்றதாகவும், அதன்பிறகு ஜுலை மாதம் மொத்தமாக கணக்கு முடித்து தருவதாக சொன்னதாகவும், அதன்பின் தான் அனிக்கு போன் செய்து பணம் கொடுக்கவில்லையே என்று கேட்டபோது அவர் இன்று வருகிறேன், நாளை வருகிறேன் என்று கூறி நாளை கடத்தி வந்துள்ளார்.

4.2) மேலும்அ.சா.1 தனது சாட்சியத்தில், பின்பு சுனிலை தொடர்பு கொண்டு அனி பணம் கொண்டு தரவில்லை என்னை ஏமாற்ற பார்க்கிறார் என்று சொன்னதாகவும், அவர் 15.09.2013 அன்று அனியை கூட்டிக்கொண்டு தனது வீட்டிற்கு வந்து 05.10.2013 அன்று ரூ. 13,00,000/– தருவதாக கூறியும், மீதிப்பணத்திற்கு அனில் கணக்கு வைத்துள்ள பெடரல் வங்கி காசோலை மூலமாக எடுத்துக்கொள்ளுமாறு கூறி தன்னிடம் காசோலைகளை தந்ததாகவும், அந்த காசோலைகளை தான் வங்கியில் தாக்கல் செய்து மேற்படி வங்கி கணக்கில் போதிய பணமில்லை என்று காசோலைகள் திருப்பப்பட்டுவிட்டதாகவும், தான் அதன்பின் அணியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு இது சம்பந்தமாக கேட்டபோது அவர் தன்னிடம் தன்னை ஏமாற்றும் நோக்குடனே இன்றுவருகிறேன், நாளை வருகிறேன் என்று பேசிக்கொண்டிருந்ததாகவும், ஒரு நாள் தான் போன் செய்து வருவீர்களா, வரமாட்டீர்களா என்று கேட்டபோது புண்டச்சி மகனே உனக்கு என்னடா பணம் தரவேண்டும் உன்னை ஆள் வைத்து கொன்றுவிடுவேன் என்று கூறியுள்ளார்,

4.3) அ.சா.1 தனது சாட்சியத்தில், தான் தனக்கு செலுத்தவேண்டிய ரூ. 35,00,000/– ரூபாயை அனி தனக்கு திருப்பி கொடுக்காமல் ஏமாற்றியதால் தான் பயந்து போய் திருக்குறுங்குடி காவல்

நிலையத்தில் இது சம்பந்தமாக புகார் மனுவில் கையொப்பம் ( அ.சா.ஆ.1) செய்து கொடுத்ததாகவும், தனக்கும் அனிக்கும் வாழை விசயம் சம்பந்தமாக இருவரும் செய்து கொண்ட 25.09.2013 தேதியிட்ட ஒப்பந்த உடன்படிக்கையிலுள்ள முதலாவது கையெழுத்து (அ.சா.ஆ.2) தன்னுடையதுதான், அதிலுள்ள இரண்டாவது கையெழுத்து அனியுடையது என்றும், அனி தனக்கு செலுத்தவேண்டிய ரூ. 35,00, 000/− க்கு வழங்கிய காசோலை நகல்கள் ( அ.சா.ஆ.3 முதல் அ.சா.ஆ.12 ) என்றும், தான் வழங்கிய வாழை தார்களின் வரவு நோட்டு புத்தகத்தின் நகல் 6 பக்கங்கள் கொண்டது (அ.சா.ஆ.13) என்றும் அதிலுள்ள கையெழுத்து அனியுடையதாகுமென்றும் என்றும் இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் தன்னை விசாரணை செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

4.4) அ.சா.2 திரு. மாரிமுத்து தனது சாட்சியத்தில், காமராஜ் என்பவர் ராஜபுதூரில் 60 ஏக்கரில் வாழை பயிர் செய்திருந்ததாகவும், தான் அந்த தோட்டத்தில் கூலி வேலை செய்து வந்ததாகவும், 2012 ம் ஆண்டு காமராஜ் 15000 வாழைகள் மட்டி, ரசகதளி, ஏத்தன் ஆகியவற்றை பயிர் செய்திருந்ததாகவும், சுனில் என்பவர் மூலமாக கேரளாவை சேர்ந்த அனி என்பவர் காமராஜிடம் மட்டி ரச வாழை தார் ஒன்றுக்கு ரூ. 260/− வீதம் பேசி வாழைகளை விற்க ஒப்பந்தம் செய்து கொண்டதாகவும், பிப்ரவரி மாதம் முதல் சிறிது சிறிதாக வெட்டி மாவடியில் வைத்து லாரியில் ஏற்றி வாழை தார்களை அனி ஏற்றி செல்வது வழக்கம் என்றும், இதற்காக ஒவ்வொரு மாதமும் கொஞ்சம் கொஞ்சமாக பணம் காமராஜிடம் கொடுப்பதாகவும், அதனால் மொத்த வாழை தாரையும் ரூ. 35,00,000/− க்கு அனிக்கு காமராஜ் பேசி கொடுத்ததாகவும், அனி ரூ. 35,00,000/− ஜூலை மாத இறுதிக்குள் காமராஜுக்கு தருவதாக கூறியுள்ளார்.

4.5) அ.சா.2 தனது சாட்சியத்தில்,எதிரி பேசியபடி பணத்தை கொடுக்கவில்லை என்றும் எனவே சுனில் மூலம் அனி, காமராஜ் வீட்டிற்கு வந்து 15.09.2013 அன்று சமரசம் பேசி 05.10.2013 க்குள் ரூ. 13,00,000/− த்தை கொடுத்துவிடுவதாகவும், மீதி தொகையை அனி தான் கணக்கு வைத்துள்ள பெடரல் வங்கி காசோலை மூலமாக எடுத்துக்கொள்ளுமாறு சொல்லி அனி காசோலைகளை கொடுத்ததாகவும், பேசி முடித்தபடி பணம் கொடுக்காததால் கொடுத்த காசோலைகள் போதிய பணமில்லை என்று திரும்பி வந்ததாலும் காமராஜ் அனியை தொடர்பு கொண்டு கேட்டதற்கு காமராஜை கெட்ட வார்த்தை பேசி கொன்றுவிடுவதாக மிரட்டியதாக காமராஜ் தன்னிடம் சொன்னதாகவும், இந்த விசயங்கள் தனக்கு நேரிடையாக தெரியும் என்றும் ரூ. 35,00,000/− த்தை அனி, காமராஜுக்கு கொடுக்காததால் காமராஜ் திருக்குறுங்குடி

காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

4.6) அ.சா.3 திருமதி. சுதா தனது சாட்சியத்தில், காமராஜ் என்பவர் ராஜபுதூரில் 60 ஏக்கரில் வாழை பயிர் செய்திருந்ததாகவும், தானும் தனது கணவரும் அந்த தோட்டத்தில் கூலி வேலை செய்து வந்ததாகவும், 2012 ம் ஆண்டு காமராஜ் 15000 வாழைகள் மட்டி, ரசகதளி, ஏத்தன் ஆகியவற்றை பயிர் செய்திருந்ததாகவும், சுனில் என்பவர் மூலமாக கேரளாவை சேர்ந்த அனி என்பவர் காமராஜிடம் மட்டி ரச வாழை தார் ஒன்றுக்கு ரூ. 260 வீதம் பேசி வாழைகளை விற்க ஒப்பந்தம் செய்து கொண்டதாகவும், பிப்ரவரி மாதம் முதல் சிறிது சிறிதாக வெட்டி மாவடியில் வைத்து லாரியில் ஏற்றி வாழை தார்களை அனி ஏற்றி செல்வது வழக்கம் என்றும், இதற்காக ஒவ்வொரு மாதமும் கொஞ்சம் கொஞ்சமாக பணம் காமராஜிடம் கொடுப்பதாகவும், அதனால் மொத்த வாழை தாரையும் ரூ. 35,00,000/− க்கு அனிக்கு காமராஜ் பேசி கொடுத்ததாகவும், அனி ரூ. 35,00,000/− ஜூலை மாத இறுதிக்குள் காமராஜுக்கு தருவதாக கூறியதாகவும், பேசியபடி பணத்தை கொடுக்கவில்லை.

4.7)அ.சா.3 தனது சாட்சியத்தில், எனவே சுனில் மூலம் அனி, காமராஜ் வீட்டிற்கு வந்து 15.09.2013 அன்று சமரசம் பேசி 05.10.2013 க்குள் ரூ. 13,00,000/− த்தை கொடுத்துவிடுவதாகவும், மீதி தொகையை அனி தான் கணக்கு வைத்துள்ள பெடரல் வங்கி காசோலை மூலமாக எடுத்துக்கொள்ளுமாறு சொல்லி அனி காசோலைகளை கொடுத்ததாகவும், பேசி முடித்தபடி பணம் கொடுக்காததால் கொடுத்த காசோலைகள் போதிய பணமில்லை என்று திரும்பி வந்ததாலும் காமராஜ் அனியை தொடர்பு கொண்டு கேட்டதற்கு காமராஜை கெட்ட வார்த்தை பேசி கொன்றுவிடுவதாக மிரட்டியதாக காமராஜ் தன்னிடம் சொன்னதாகவும், இந்த விசயங்கள் தனக்கு நேரிடையாக தெரியும் என்றும் ரூ. 35,00,000/− த்தை அனி, காமராஜுக்கு கொடுக்காததால் காமராஜ் திருக்குறுங்குடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

4.8) அ.சா.4 திரு. ஜிம்மி ஜோசப் தனது சாட்சியத்தில் தான் 2007 ம் ஆண்டுசுனில் ஷேக் என்பவருடன் பழக்க் ஏற்பட்டு வியாபாரம் செய்து வந்ததாகவும், வியாபாரம் சரியில்லாததால் கேரளாவிற்கு வந்து தொழில் செய்து வந்தாகவும், 2011 ம் ஆண்டு கேரளாவிற்கு வந்ததாகவும் , தானும் சுனிலும் சேர்ந்து ஒவ்வொரு ஊரிலும் உள்ள பெரிய அளவிலான தோட்டத்தை குத்தகைக்கு வாங்கி காய்கறி, வாழை போட்டு விளையும் பொருள்களை கேரளாவில் விற்பனை செய்யலாம் என்று 2012 ம் ஆண்டு

ஊட்டி, டிபி பஜாரிலுள்ள 30 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்து காய்கறிகள் பயிர் செய்து மேட்டுப்பாளையம் மார்க்கெட்டில் விற்பனை செய்து வந்ததாகவும், பருவத்தை மேர்பார்வை செய்ய கேரள மாநிலத்தல் வேளாண்மை துறை அதிகாாயாக பணிபுரிந்த குட்டன் மகன் அனி என்பவரிடம் தோட்டத்தை ஒப்படைத்ததாகவும், தோட்டத்தை அவர் வசம் ஒப்படைத்துவிட்டு கேரளாவிற்கு வந்துவிட்டதாகவும், 2012 ம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டம் ராஜபுதுாரிலுள்ள பணகுடி செல்லும் மெயின் ரோட்டில் காமராஜ் என்பவருக்கு சொந்தமான 60 ஏக்கர் நிலம் இருப்பதாக தெரிந்து அந்த இடத்தை வந்து பார்த்ததாகவும், அந்த இடத்தில் 17 ஏக்கர் வாழை பயிர் செய்து அறுவடைக்கு தயாராக இருந்ததாகவும், தாங்கள் அனியை அழைத்து சென்று காமராஜிடம்அந்த இடத்தை தங்களுக்கு விவசாயம் செய்வதற்காக கேட்டபோது அவர் வாழையை வெட்டிவிட்டு தருவதாக கூறியுள்ளார்.

4.9) அ.சா.4 தனது சாட்சியத்தில்,அந்த தோட்டத்தில் போட்டிருந்த 16,000/- வாழையை அனி வாழை நல்முறையில் உள்ளது என்றும் அதை எடுத்தால் நல்ல விலைக்கு போகும் என தங்களிடம் ஆசைவார்த்தை கூறியதாகவும், முதலில் தாங்கள் மறுத்துவிட்டு பின்னர் வாழைகளை வாங்குவதற்கு சம்மதித்ததாகவும், காமராஜ் தோட்டத்தில் உள்ள 16,000 வாழைகளில் ரசகதளி, ஏத்தன், மட்டி என மூன்று வகை இருந்ததாகவும், மட்டி வாழைத்தாருக்கு ரூ. 20 என்றும், ரசகதளி மற்றும் ஏத்தத்திற்கு ரூ. 260 என்றும் பேசி தாங்கள் 2வது பார்ட்டியாக இருந்து ஒப்பந்தம் போட்டதாகவும், அனி குறிப்பிட்டு அந்த பத்திரத்தில் 2வது பார்ட்டியாக தங்கள் சார்பில் கையெழுத்து செய்ததாகவும், அந் ஒப்பந்த பத்திரத்தில் தானும், முகமது ரபீக், சுனில் ஷேக் ஆகிய மூவரும் கையெழுத்து செய்ததாகவும், பிறகு தாங்கள் கேரளாவிற்கு சென்றுவிட்டதாகவும், பிப்ரவரி மாதத்தில் வாழை வெட்ட ஆரம்பித்து கேரளமாநிலம் கொல்லம் கொண்டு வருவதற்கு அனி சம்மதித்ததாகவும், மே மாத இறுதியில் தாங்கள் காமராஜ் வீட்டிற்கு வந்தபோது காமராஜ் வாழைத்தாரை வெட்டியதற்காக ரூ. 3,20,000/- வரை கொஞ்சம் கொஞ்சமாக செலுத்தியுள்ளார்.

4.10) அ.சா.4 தனது சாட்சியத்தில், மீதிப்பணத்தை கேரள அரசு பண்ணையிலிருந்து பணம் வந்தவுடன் காமராஜிடம் தருவதாக கூறியதாக தங்களிடம் கூறியதாகவும், மே மாதம் வரை வாழையைவெட்டி காலி செய்த பிறகு தாங்கள் தோடடத்தை காமராஜிடம் சென்று கேட்டு அனி வசம் ஒப்படைத்து காய்கறி காய்கறி மற்றும் வாழைப்பயிர் செய்து வந்ததாகவும், இதனிடையில் காமராஜ் தன்னிடமும், சுனிலிடமும்

இதுவரை தனக்கு பணம் தரவில்லை என்றும் நீங்கள் தலையிட்டு பணத்தை காமராஜுக்கு கொடுக்க சொல்லவேண்டும் என்றும் கூறியதாகவும், 15.09.2013 ம் தேதி தான், சுனில், அனி ஆகிய மூவரும் சேர்ந்து நடு மாவடி காமராஜ் வீட்டிற்கு சென்று வீட்டிற்கு சமரசம் பேசி அனி 05.10.2013 க்குள் ரூ. 13,00,000/– ரூபாயை காமராஜுக்கு கொடுத்துவிடுவதாகவும், மீதிப்பணத்திற்கு பெடரல் வங்கி 10 காசோலைகளை அனி காமராஜிடம் கொடுத்துவிடுவதாகவும், பேசி முடிவு செய்வதாகவும், அனி சொன்படி பணத்தை கொடுத்துவிடுவார் என்று தாங்கள் கவனிக்காமல் இருந்துவிட்டதாகவும், பின்னர் விசாரித்தபோது காமராஜுக்கு பணத்தை கொடுக்கவில்லை.

4.11) அ.சா.4 தனது சாட்சியத்தில், போலியாக செக்கை கொடுத்து ஏமாற்றியதாகவும் அனி மீது கேரளாவில் பல மோசடி வழக்குகள் இருப்பதாகவும், கேரள வேளாண்மை துறையிலிருந்து அவர் பணி நீக்கம் செய்யப்பட்டதாகவும் தெரிந்து கொண்டதாகவும், தாங்கள் விசாரித்து தரிந்து கொண்டதை காமராஜிடம் கூறி அவரிடம் எந்த தொடர்பும் வைத்துக்கொள்ளவேண்டாம் என்று சொன்னதாகவும், காமராஜை அனி மிரட்டியதாகவும், இது சம்பந்தமாக அவர் புகார் கொடுத்துள்ளதாக தெிந்துகொண்டதாகவும், தன்னிடம் காட்டப்படும் ஆவணம் வாழைத்தார்களுக்காக காமராஜுக்கு தங்களுடைய சார்பில் அனி இரண்டாவது பார்ட்டியாகவும் இருந்து கையெழுத்து செய்தது தான் அது ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், அ.சா. ஆ.3 முதல் அ.சா.ஆ.12 வரையிலான பெடரல் வங்கியின் காசோலைகள் காமராஜுக்கு அனி தங்கள் முன்னிலையில கொடுத்ததுதான் என்றும், இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரணை செய்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

4.12) அ.சா.5 திரு. துரைப்பாண்டி தனது சாட்சியத்தில், பார்வைமகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து (அ.சா.ஆ.14) 16.11.13 ம் தேதி 8 மணியளவில் பணகுடியிலிருந்து ராஜபுதுார் செல்லும் ரோட்டிலுள்ள காமராஜ் வாழை தோட்டத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்ததாகவும், அதில் தானும் பாண்டியும் கையெழுத்து செய்ததாகவும், இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரணை செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

4.13) அ.சா.6 திரு. மனோஜ்குமார் தனது சாட்சியத்தில்2013 ம் ஆண்டு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது 16.11.2013 ம் தேதி 19 மணிக்கு சமுதாய பணி பதிவேடு எண். 269/213 தொடர்பான மனுவினை பரிசீலனை செய்த புகாரின் தன்மைக்கேற்ப குற்ற எண். 161/203 இதச பிரிவு420, 294(b), 56(1) படி முதல் தகவலறிக்கை (அ.சா.ஆ.15) பதிவு

செய்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

4.14) அ.சா.7 திரு. பாண்டியன் தனது சாட்சியத்தில், பார்வைமகஜரிலுள்ள இரண்டாவது கையழுத்து தன்னுடையதுதான் என்றும 16.11.2013 அன்று இரவு 8 மணியளவில் காமராஜர் என்பரின் வைா தோட்டத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு பார்வைமகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்து, தான் உடனிருந்து சாட்சியாக கையொப்பம் (அ.சா.ஆ.16) செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

4.15) அ.சா.8 திருமதி. சூசையம்மாள் கிருபா தனது சாட்சியத்தில், கடந்த 16.11.2013 ம் தேதி 19.00 மணிக்கு உதவிஆய்வாளர் திரு. மனோஜ்குமார் அவர்கள் பதிவு செய்த குற்ற எண். 161/2013 வழக்கை முதல் விசாரணை எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் திரு. கனகராஜ் அவர்கள் சம்பவ இடம் சென்று சாட்சிகள் துரைப்பாண்டியன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் ( அ.சா.ஆ 17), மாதிரி வரைபடம்( அ.சா.ஆ. 18) தயார் செய்ததாகவும், பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் இவ்வழக்கை மேல் விசாரணை எடுத்துக்கொண்ட திருமதி. நாககுமாரி, காவல் ஆய்வாளர் அவர்கள் பட்டியல் சாட்சிகளை விசாரித்தபோது முந்தைய விசாரணை அதிகாரியிடம் கூறியதை கூறியதால் தனியாக பதிவு செய்யவில்லை என்றும், பின்னர் இவ்வழக்கை 19.01.2015 அன்று மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் திரு. ஜவகர் பட்டியல் சாட்சிகளை விசாரித்தபோது முந்தைய விசாரணை அதிகாரியிடம் கூறியதை கூறியதால் தான்தனியாக பதிவு செய்யவில்லை என்றும், வழக்கி் எதிரி முன் பிணை பெற்று பிணையில் சென்றதால் கைது நடவடிக்கை இல்லை என்றும், எதிரி மீது குற்றம் உறுதியானதால் எதிரி மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

5) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகம் தரக்கூடிய அம்சங்களை குறித்து எதிரியிடம் குற்றவிசாரணை முறைச்சட்டம் பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் வினவிய போது எதிரி பொய் சாட்சி என்று தெரிவித்தார். தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு என்றார். ஆனால் எதிரி தரப்பில் யாரையும் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. எனவே எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**6) இவ்வழக்கில் நாம் தற்போது தீர்மானிக்க வேண்டியது யாதெனில், எதிரி மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் தகுநிலை**

**ஐயப்பாட்டிற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

6.1) எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தகுநிலை ஐயப்பாடுகளுக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதை ஆராய்கையில், அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர்கள் தங்களது முதல் விசாரணையில் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளித்துள்ளார்கள். ஆனால் தங்களது குறுக்கு விசாரணையில் பிறழ் சாட்சியமளித்துள்ளார்கள். மேலும் அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் போலீசார் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் சாட்சியமளித்ததாகவும், புகார் மனுவில் எழுதியுள்ள விபரம் தனக்கு தெரியாது என்றும், எதிரிக்கும், தனக்கும் பகை எதுவும் இல்லை என்றும், மற்ற சாட்சிகள் தனது உறவினர்கள் மற்றும் தன்னுடன் வேலை பார்க்கும் நபர்கள் என்றும், தனக்கும் எதிரிக்கும் உள்ள வரவு செலவு பிரச்சனையை தற்போது பேசி முடித்துக்கொண்டோம் என்றால் சரிதான் என்றும், எதிரியை விடுதலை செய்வதில் தனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான் என்றும் புகாரில் சொல்லியபடி சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரிதான் என்று சாட்சியமளித்துள்ளார்.

6.2) அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில், முதல் விசாரணையில் போலீசார் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் சாட்சியமளித்ததாகவும், அ.சா1 டம் தான் வேலை பார்த்து வந்ததாகவும், அவர் தனது முதலாளி என்பதால் அவர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் சாட்சியமளித்ததாகவும், வழக்கு சம்பவம் பற்றி தனக்கு நேரடியாக தெரியாது என்றும், அ.சா.1 ம், எதிரியும் சமரசமாகிவிட்டதாகவும், புகாரில் சொல்லியபடி சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரிதான் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

6.3) அ.சா.3 தனது குறுக்கு விசாரணையில், தான் முதல் விசாரணையில் போலீசார் கூறியதன்பேரில் சாட்சியமளித்ததாகவும், அ.சா.1 க்கும், எதிரிக்கும் என்ன கொடுக்கல் வாங்கல் என்று தனக்கு தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார். எனவே அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகளின் முதல் விசாரணையில் சந்தேகம் எழுகிறது.

6.4) மேலே பரிசீலனை செய்தவகையில் அ.சா.1, 2, 3 ன் சாட்சியம் திருப்திகரமாக இல்லை என்பதாலும், அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள்

குறுக்கு விசாரணையில் பிறழ் சாட்சியமளித்துள்ளதாலும், இவ்வழக்கில் எழும் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி அவர்களை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்வதே சரியானதாக இருக்குமென்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

7) முடிவாக, எதிரி மீதான இதச பிரிவுகள் 420, 294(b), 506(1) படியான குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால், எதிரியை மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து, எதிரியை கு.வி.மு.ச.பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

8)இவ்வழக்கில் சான்றுபொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 29–ம் நாள் இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ஓம்/– பி. மோசஸ் ஜெபசிங்
நீதித்துறை நடுவர் ,
வள்ளியூர்.

<u>அரசுத்தரப்பு சாட்சிகள்.–</u>

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. காமராஜ் |
| அ.சா.2 | திரு.மாரிமுத்து |
| அ.சா.3 | திருமதி. சுதா |
| அ.சா.4 | திரு.ஜிம்மி ஜோசப் |
| அ.சா.5 | திரு.துரைப்பாண்டி |
| அ.சா.6 | திரு.மனோஜ்குமார் |
| அ.சா.7 | திரு.பாண்டியன் |

| | |
|---|---|
| அ.சா. 8 | திருமதி. சூசையம்மாள் கிருபா ( காவல் ஆய்வாளர்) |

**அரசுத்தரப்பு சான்றாவணங்கள்.–**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ. 1 | 16.11.2013 | புகார் மனுவிலுள்ள அ.சா.1ன் கையொப்பம் |
| அ.சா.ஆ. 2 | 25.09.2013 | தேதியிட்ட ஒப்பந்த உடன்படிக்கை |
| அ.சா.ஆ. 3 | 27.11.2013 | தேதியிட்ட 076891 எண் கொண்ட ரூ. 1,80,000/–த்திற்கான காசோலை நகல் |
| அ.சா.ஆ. 4 | 24.11.2013 | தேதியிட்ட 076889 எண் கொண்ட ரூ. 2,00,000/–த்திற்கான காசோலை நகல் |
| அ.சா.ஆ. 5 | 18.11.2013 | தேதியிட்ட 076886 எண் கொண்ட ரூ. 2,00,000/–த்திற்கான காசோலை நகல் |
| அ.சா.ஆ. 6 | 10.11.2013 | தேதியிட்ட 076885 எண் கொண்ட ரூ. 2,00,000/–த்திற்கான காசோலை நகல் |
| அ.சா.ஆ. 7 | 04.11.2013 | தேதியிட்ட 076884 எண் கொண்ட ரூ. 2,00,000/–த்திற்கான காசோலை நகல் |
| அ.சா.ஆ. 8 | 27.10.2013 | தேதியிட்ட 076883 எண் கொண்ட ரூ. 2,00,000/–த்திற்கான காசோலை நகல் |
| அ.சா.ஆ. 9 | 21.10.2013 | தேதியிட்ட 076882 எண் கொண்ட ரூ. 2,00,000/–த்திற்கான காசோலை நகல் |
| அ.சா.ஆ. 10 | 09.10.2013 | தேதியிட்ட 076887 எண் கொண்ட ரூ. 2,00,000/– |

| | | |
|---|---|---|
| | | த்திற்கான காசோலை நகல் |
| அ.சா.ஆ. 11 | 05.10.2013 | தேதியிட்ட 076890 எண் கொண்ட ரூ. 2,00,000/– த்திற்கான காசோலை நகல் |
| அ.சா.ஆ. 12 | 14.10.2013 | தேதியிட்ட 076881 எண் கொண்ட ரூ. 1,00,000/– த்திற்கான காசோலை நகல் |
| அ.சா.ஆ. 13 | – | வாழை தார்களின் வரவு நோட்டு புத்தகத்தின் நகல் ( 6 பக்கங்கள்) |
| அ.சா.ஆ. 14 | 16.11.2013 | பார்வைமகஜரிலுள்ள அ.சா.5 ன் முதலாவது கையொப்பம் |
| அ.சா.ஆ. 15 | 16.11.2013 | முதல் தகவலறிக்கை |
| அ.சா.ஆ. 16 | 16.11.2013 | பார்வைமகஜரிலுள்ள அ.சா.7 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ. 17 | 16.11.2013 | பார்வைமகஜர் |
| அ.சா.ஆ. 18 | 16.11.2013 | மாதிரி வரைபடம் |

**<u>அரசுத்தரப்பு சான்றுப்பொருள்.–</u> இல்லை**
**<u>எதிரி தரப்பு சாட்சிகள்– இல்லை</u>**
**<u>எதிரி தரப்பு சான்றாவணங்கள்.–</u>** இல்லை.

ஒம்/– பி. மோசஸ் ஜெபசிங்
நீதித்துறை நடுவர் ,
வள்ளியூர்.

<u>குறிப்பு</u>

1. வழக்கின் முடிவு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.
3. எந்த ஒரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைத்து விசாரிக்கப்படவில்லை.

நகல்.... மாண்புமிகு தலைமை குற்றவியல் நடுவர்,திருநெல்வேலி.